**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2021**

**……………………………………………………………………………………………**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**……………………**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**………………………………………………**

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**…………………………………………………………………………**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

**………………………………………………………………………………………………………………………**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின்

பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

..........................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 37 ஆம் பிரிவின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடுள்ள பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பானது காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 78,184,784,968 ஆகும். மேலும் இக்கடப்பாட்டினை தீர்த்துவைப்பதற்கு போதியளவு | 2007 ஆம் ஆண்டின் போது விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிய பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதிய திட்டமானது சுய நிதியை அடிப்படையாகக் கொண்டிருக்காததனால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டிருக்காததுடன் சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தக்கூடிய ஒரு புதிய திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பழைய திட்டத்தின் கொடுப்பனவுகள் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் | ஓய்வூதிய பொறுப்பானது காப்பீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் கால ரீதியான கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முதலீடு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம்கொடுப்பனவு செய்யப்படுவதுடன் புதிய விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் காப்பீட்டு மதிப்பீட்டினை பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் பழைய திட்டத்தினதும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெறுகின்றது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்படுகின்ற பங்களிப்பாளர்களிடமிருந்து கணக்காண்டிற்காக கிடைக்க வேண்டிய பங்களிப்பு பணத்தின் பெறுமதியை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் ஓய்வூதியத் திட்டத்திற்காக கட்டுப்பட்ட திகதி மற்றும் உரிமையாண்மை திகதியை உள்ளடக்கி பங்களிப்பாளர்களின் பெயர் பதிவேடு முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாமையின் காரணமாக பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் ரூபா 112,139,246 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பின்னைய தவணைப் பணங்களை கணனிமயப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதனால் செல்லுபடியற்றதான மற்றும் செயற்பாடற்றதான பங்களிப்பாளர்களிடமிருந்து முறைமையினூடாக பெற்றுக்கொள்வதற்கு சிக்கலாக உள்ளது. இந்நிலைமையின் காரணமாக பின்னைய தவணைப் பணங்களை சுயமாக கணனிமப்படுத்துவதற்காக அரசாங்க வணிக வங்கிகளின் மூலம் பின்னைய தவணைப் பணங்களை அறவிட்டு அந்த பணங்களை எங்களின் தரவு முறைமைக்கு தொடர்புபடுத்தும் விசேட வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பங்களிப்பாளர்களின் பெயர்ப் பதிவேட்டினை பூரணமாகவும் நாளதுவரையாகவும் பேணவேண்டியதுடன் பங்களிப்பு பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் விவசாய ஓய்வூதியத்திலிருந்து விவசாயிகளுக்கு செலுத்தப்படாத ரூபா 107,929 தொகையை மீளாய்வாண்டில் மீண்டும் ஏடுகளுக்கு கொண்டுவரும் போது தபால் அலுவலக கணக்கிற்கு வரவு | சபைக்கு கிடைக்க வேண்டிய செலுத்தப்படாத ஓய்வூதிய பணம் தபால் திணைக்களத்தின் மாவட்ட கணக்காளரின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் முன்னைய ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 | செலுத்தப்படாத விவசாயிகள் ஓய்வூதியச் செலவுகள் கணக்கிற்கு செலவு வைக்கப்படாத செலுத்த வேண்டிய விவசாயிகளின் |

| | | |
|---|---|---|
| வைத்து செலுத்தவேண்டிய ஓய்வூதியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக பிழையாக ஆண்டிற்கான விவசாய ஓய்வூதிய செலவுக் கணக்கிற்கு செலவுவைத்ததனால் ஆண்டிற்கான மிகை அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டில் பணத்தைப் பெறும் போது முன்னைய ஆண்டில் உறுதிப்படுத்தப்படாத ரூபா 107,929 பணம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்ட பெறவேண்டிய மீதி அத்தொகையால் குறைவடைந்திருந்தது. கிடைத்த பணமானது, கிடைக்கவேண்டிய செலுத்தப்படாத ஓய்வூதிய கணக்கிற்கு (தபால் அலுவலகம்) செலவு வைக்கப்பட்டு மிகையானது விவசாயிகள் ஓய்வூதிய செலவுக்கு கணக்கீடு செய்யப்பட்டது. | ஓய்வூதிய கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும். |

**1.5.3 நிதியம் தொடர்ச்சியாகக் காணப்படுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 81,967,040,765 மறை மீதியை கொண்டிருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 4,779,128,996 ஆக இருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு முறையே ரூபா 19,316,409 மற்றும் ரூபா 15,746,696 ஆக இருந்ததுடன் விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவுகள் முறையே ரூபா 4,502,560,108 மற்றும் ரூபா 3,719,165,280 ஆக இருந்தது. ஓய்வூதிய கொடுப்பனவுக்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,450,949,000 மற்றும் ரூபா 3,753,000,000 தொகைகள் திறைசேரியின் மூலம் கிடைத்திருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்ததை செயற்படுத்த முடியாத நிலைமை | விவசாயிகள் ஓய்வூதிய பொறுப்பு வருடாந்தம் அதிகரித்திருப்பதுடன் திட்டத்தில் முதலீடுகள் இல்லாமையும் இத்திட்டத்தின் பிரதிபலன்களை தவணைப்பணத்தை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்க கொள்கையின் காரணமாக அதிகரித்ததன் காரணமாக இந்நிலமை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் பணத்தை ஒதுக்கீடு செய்து விவசாயிகள் ஓய்வூதியத்தினை செலுத்துதல் இடம்பெறுகின்றன. | திட்டத்தை செயற்பாடுள்ளதாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காணப்பட்டது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது 161 நபர்களுக்கு செலுத்தவேண்டிய தேறிய தவணைப்பண கொடுப்பனவுகள், அவற்றிற்குரிய வட்டி, பலவீன முதியோர் கொடுப்பனவுகள், மரணபணிக்கொடை பணம் என்பவற்றிற்காக எழுதப்பட்ட ரூபா 1,304,300 தொகையான 161 காசோலைகள் பணம்பெறுவோரால் உரமை கோரப்படவில்லை எனஉறுதிப்படுத்தப்படாது வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் காலம் காலாவதியாகுகையில் அக்காசோலைகளை வருமானத்திற்கு எடுத்தல் இடம்பெறுவதுடன் மாவட்ட அலுவலகங்களினூடாக கிடைக்கின்ற வேண்டுதல்களின் பிரகாரம் மீண்டும் காசோலைகள் வழங்கப்படுகின்றன. காலாவதியான காசோலைகள், ஏடுகளுக்கு கொண்டு வரப்படுவதுடன் பங்களிப்பாளர்களால் உரிமை கோரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் உரிய மாவட்ட அலுவலகத்தின் சிபாரிசுக்கு இணங்க மீண்டும் பணம் பெறுபவருக்கு காசோலைகள் வழங்கப்படும். | உரிமை கோரப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 3,719,165,280 ஆக இருந்ததுடன் அப்பெறுமதியில் விவசாயிகளால் உரிமை கோரப்படாத ஓய்வூதியங்களின் அளவு ரூபா 125,633,943 ஆகும். இடம்பெற்றுள்ள குறைபாடுகளை சரிசெய்து அத்தொகையை ஓய்வூதியத்திற்கு தகமையுள்ளவர்களுக்கு வழங்குவதற்கு | விவசாயிகள் ஓய்வூதியமானது விவசாயிகளால் பெற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களில் சபைக்கு மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு பெற்றுக்கொள்கின்ற விவசாய ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்பவர்கள் மரணமடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் மற்றும் 06 மாதங்களாக நலன்களை பெற்றுக்கொள்ளாத நலன்பெறுனர்களின் பெயர் பெயர்ப் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அடுத்துவரும் மாதத்தின் போதேனும் விவசாயிகளால் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியங்களை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (i) பிரிவு 6(1) | 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டிய போதிலும் ஓய்வூதியம் தயாரித்த திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டிய நிலுவை ஓய்வூதியத்திற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் விவசாயிகளுக்கு செலுத்தப்படாது 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 3,835,146,157 தொகையான நிலுவை ஓய்வூதியம் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டன. | ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்காக காத்திருத்தல் பட்டியலில் இருக்கும் 20,000 இற்கும் அதிகமான விவசாயிகளின் எண்ணிக்கையை விரைவாக ஓய்வூதிய பதிவேட்டிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் காத்திருத்தல் பதிவேட்டிலுள்ள விவசாயிகளில் அதிகமானவர்களுக்கு ஓய்வூதியத்தினை செலுத்தக்கூடியதாக இருந்தது. எதிர்காலத்தில் எந்த நிலுவைப்பணமும் ஏற்படாத வகையில் ஓய்வூதியத்திற்கு தகமை பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதிய பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு செலுத்த வேண்டி காணப்படுகின்ற ஓய்வூதியத்தை எதிர்காலத்தில் திறைசேரியிடம் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | 60 வயதினைப் பூர்த்திசெய்த திகதியிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியத்தினை செலுத்துதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | பிரிவு மற்றும்(3) | 15(2) | நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்வதற்காக அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் செய்வதற்காக தவணைப்பணத்தை முறைப்படியாக செலுத்தாத சந்தர்ப்பம் என்ன என்பதனை கணிப்பீடு செய்வதற்கு இயலுமான வகையில் திட்டத்தினால் தகவல்கள் பேணப்படாதிருந்ததனால் நலன்களை இழந்துள்ள சந்தர்ப்பம் தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 60 வயதினைப் பூர்த்திசெய்து ஓய்வூதியம் பெறுவதற்கு தகமையுள்ளது என்ற கருத்தில் 1127 நபர்களினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்காக பங்களிப்பு செய்துள்ள விவசாயிகள் தொடர்ச்சியாக 05 தவணைப்பணங்களை செலுத்த தவறினால் அவர்களின் பங்களிப்பு இரத்துச் செய்யப்படுவதுடன் அது தொடர்பாக அவர்கள் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும் போது தேவையான தெரியப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தவணைப் பண குறிப்பு புத்தகத்திலும் சான்றிதழ் உறுதியிலும் அது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் செலுத்திய தவணைப் பணங்களை அவர்களின் வயது 60 பூர்த்தி செய்கின்ற சந்தர்ப்பங்களில் வட்டியுடன் சேர்த்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தவணைப் பணத்தை செலுத்தாததன் அடிப்படையில் நலன்களை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | பிரிவு 27(1) | | விடயத்திற்குப் பொறுப்பான அமச்சரின் மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கடனின் அளவு தீர்மானிக்கப்பட | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது விவசாய ஓய்வூதியம் செலுத்துவதற்காக அத்திட்டத்தில் பணம் இல்லாததனால் நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சிபார்சுகளின் பிரகாரம் விவசாய காப்புறுதி மற்றும் கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்திலிருந்து பணத்தை பெற்று கொடுப்பனவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கடனின் அளவு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் அவ்வாறான இணக்கப்பாட்டினைப் பற்றுக்கொள்ளாது கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திடமிருந்து கமத்தொதழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டத்திலிருந்தும் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்தின் மீதி முறையே ரூபா 248,129.566 மற்றும் ரூபா 546,031,197 ஆகும். | செய்யப்பட்டது இக்கடன் பணம் படிப்படியாக மீளளிப்புச் செய்யப்படும். | தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுறேகள் ரூபா 249,530,974 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 67,897,112 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 181,633,862 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நிருவாகச் செலவுகளுக்கான திறைசேரி மானியம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 197,000,000 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் அங்கத்தவர்களது வாழ்க்கை தரவு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையை தயாரிப்பதற்கு மற்றும் மாவட்ட மட்டத்தில் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தரவுகளை | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் பங்களிப்பாளர்களது தகவல்களை நாளதுவரையாக்கும் நிகழ்ச்சிததிட்டத்தின் போது தகவல்களை வழங்கிய விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியைக் | ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கபட்ட விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கி முறைமையை நாளது வரையாக்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்குவதற்கான உத்தேச செயற்திட்டத்திற்காக ரூபா 5,640,925 தொகை 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரை செலவு செய்யப்பட்டிருந்தது. 2022 மே மாதம் வரையும் 14 மாவட்டங்களின் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு முறைமையை நாளது வரையாக்காமையால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கொண்டிருந்தும் கிடைத்துள்ள தகவல்கள் மாவட்ட மட்டத்தில் கணனி மயப்படுத்தப்பட்டு நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மீளாய்விற்காக விவசாயிகளின் எதிர் செயலாற்றல் குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததனால் மீளாய்வு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | விவசாய ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியத்தினை செலுத்துதல் மற்றும் நிருவாக செலவுகளுக்காக மாதாந்தம் திறைசேரியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்வதுடன் அவ்வாறு இருக்கையில் விவசாயிகளுக்கு பலவீனமடைதல் கொடுப்பனவு மற்றும் கமத்தொழில் மற்றும் கமநல திட்டத்தில் வருடாந்த தவணைப் பணத்தை வைப்புச் செய்து விவசாயிகளை காப்புறுதி செய்து ஒரு காப்புறுதி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் பெறுமதி ரூபா 1,146,766,067 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான தவணைப்பணம் ரூபா 17,737,354 மற்றும் ஆண்டின் போது பலவீனமடைதல் கொடுப்பனவும் மரண பணிக்கொடை கொடுப்பனவும் | விவசாய ஓய்வூதிய பங்களிப்பாளர்களுக்கு மரண மற்றும் பலவீன பணிக்கொடைகளைச் செலுத்துவதற்காக இந்த நிதியம் தொடக்கத்திலேயே ஏனைய காப்புறுதி நிறுவனங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிகழ்காலத்தில் சபையினுள் உள்ள விவசாய காப்புறுதி திட்டத்தின் மூலம் ஒரு விவசாயிக்கு ரூபா 60 தொகையான வருடாந்த பங்களிப்பினூடாக இந்நிதியம் தயாரிக்கப்பட்டது. விவசாய ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னர் பங்களிப்பாளருக்கு நலன்களை செலுத்துவதற்காக இந்நிதியம் அவசியமானதாகும். பொதுத் திறைசேரியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வது ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கும் செயற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகளுக்கும் மாத்திரமாகும். | காப்புறுதியினை செயற்படுத்துவதின் விளைதிறனை ஆய்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,011,630 ஆகும். இக்காப்புறுதியை செயற்படுத்துபவரின் விளைதிறனை ஆய்வு செய்யாது தொடர்ச்சியாக அது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது விவசாய ஓய்வூதிய நிதியத்திற்கு நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் வங்கி கணக்கிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 247,000,000 தொகையில் மீளாய்வாண்டில் திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூபா 209,734,912 தொகை செலவு செய்து மிகுதியான ரூபா 37,36,088 தொகை விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்காததுடன் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் வங்கி கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மீதி ரூபா 199,551 மாத்திரம் இருந்ததனால் அப்பணம் ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நிருவாக மற்றும் செயற்பாட்டு செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 247 மில்லியன் தொகையான முழுப்பணமும் விவசாயிகள ஓய்வூதிய திட்டத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது சபையின் விவசாய காப்புறுதித் திட்டத்திற்கும் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்குமிடையே பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கினுள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டின் போது இடம்பெறுகின்ற சில கொடுக்கல் வாங்கல்கள் சபையின் பிரதான திட்டமாகிய விவசாய காப்புறுதித் திட்டத்தின் மூலம் இடம்பெற்று அத்திட்டத்திற்குரிய செலவுகள் மேலே கூறப்பட்ட நடைமுறைக் கணக்குகளின் மூலம் செம்மையாக்கல்கள் செய்யப்படுகின்றன. அதற்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து பணமும் விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தின் மீதியினுள் காணப்படுகின்றன. | திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருத்தல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 6,478 விண்ணப்பங்கள் விவசாயிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அதில் 1,580 விண்ணப்பங்களுக்கு நலன்களை வழங்குவதற்கு திட்டத்திற்கு முடியாதிருந்தது. | இக்கொடுப்பனவுகளை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விவசாயிகளுக்கு துரிதமாக பிரதிபலன்களை வழங்குதல் வேண்டும். |